DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 93/2023 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | கார்த்திகா |
| Father's /Husband Name | : | பிரபு |
| Village | : | பாளையூர் |
| Taluk | : | மன்னார்குடி |
| Age | : | 27 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03th day June 2024.
Accused A1, A2 present.

**முதல் விசாரணை:-**

எனது கணவர் பிரபு, கும்பகோணத்தில் பேருந்தில் கிளினராக பணி செய்து வந்தார். 06.07.2022 ம் தேதி மாலை 07.00 மணியளவில் எனது கணவர் பணிக்கு சென்றார். என் கணவருடன் கார்த்தி என்பவர் நடத்துநராக வேலை செய்துவந்தார். 07.07.2022 ம் தேதி இரவு 12.30 மணியளவில் எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், அவர் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருப்பதாக தகவல் கிடைத்தது- காலை 10.00 மணிக்கு நான் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது கணவர் உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டதாக மருத்துவமனையில் இருந்தவர்கள் கூறினார்கள். எனது கணவரின் உடல் முழுக்க காயம் இருந்தது. எனது கணவரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக கும்பகோணம் மேற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலிசார் என் முன்பாகவும், பஞ்சாயத்தார் முன்பாகவும் பிரேத விசாரணை செய்தார்கள். பிறகு பார்த் பெட்ரோல் பங்கில் சென்று விசாரித்தபோது எனது கணவர் வேலையை முடித்துவிட்டு பேருந்தின் பின்பக்கத்தில் படுத்து தூங்கிக்கொண்டிருந்தார். சரண்ராஜ் கவனகுறைவாக பேருந்தை பின்னல் இயக்கியபோது எனது கணவர் மீதுமோதி சிமென்ட் கட்டையுடன் நசுக்கியதாக விசாரணையில் தெரியவந்தது. விபத்து ஏற்படுத்திய பேருந்து பதிவெண் TN 49 AY 1414 ஆகும். பேருந்தை கவனகுறைவாக ஓட்டுநர் இயக்கியதால் எனது கணவர் சக்கரத்தில் மாட்டியிருந்ததை சரண்ராஜ், செந்தமிழரசன், சுப்பிரமணியசிவா, மனுநீதி, கோவிந்தராஜ் ஆகியோர் சத்தம்போட்டவுடன் பேருந்தை நிறுத்திவிட்டார். பிறகு நான் 12.07.2022 ம் தேதி இது சம்பந்தமாக நடவடிக்காக புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் நான் கொடுத்ததுதான்

(**அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). ஆஜர் எதிரிகள் விபத்து ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர், நடத்துநர் ஆவார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் 7 புகைப்படத்தில் உள்ள பேருந்து **விபத்து ஏற்படுத்தியதாகும். அந்த 7 புகைப்படங்கள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:-

நான் D.T.Ed. படித்துள்ளேன். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகாரை நான் எழுதினேன். எனது கணவருக்கு குடிபழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் சுமார் 6 மாதமாக ஒரே கம்பெனியில் கிளீனராக வேலை செய்து வந்தார். அந்த கம்பெனியில் ஓய்வு அறை உள்ளது என்றால் தெரியாது. 12.07.2022 அன்று புகார் அளித்தேன் என்றால் சரிதான், எனது கணவர் மரணம் குறித்து அன்றுதான் சரியான தகவல் கிடைத்தது. போலிசார் என்னை காவல் நிலையத்தில்தான் விசாரித்தார்கள், வேறு எங்கும் வைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

2. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எனது கணவர் மதுபோதையில் வேறு வாகனத்தில் மோதி இறந்துவிட்டார் என்றாலும், இறந்த நபர் எனது கணவர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**நீதிமன்ற குறிப்பு**

சாட்சி முதல் விசாரணையின்போது அழுதுக்கொண்டே சாட்சியம் அளித்து மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டதால் மதிய உணவு இடைவேளைக்கு பிறகு விசாரணை தொடரப்பட்டது.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.